*சரணாகதியின் ஆன்மீகச் சிறப்பு*

*பிரச்சனையில்லாத பொழுதுள்ள சாந்தம், பிரச்சனை வந்த போது கலைகிறது. கலைந்துவிட்ட இந்த சாந்தம் அன்னையின் தொடர்பால் மீண்டும் கிடைக்கும் பொழுது அது சிறப்புற்று முழுமை பெறுகிறது.*

*அசைவற்ற முழுபிரம்மம் (*Absolute*) சிருஷ்டியில் அசைவிற்கு வந்து தன் முழுமையை இழக்கிறது. இந்த சிருஷ்டி சரணாகதியால் திருவுறுமாறி அசைவிலேயே தான் இழந்த முழுமையை சிறப்பாக பெறும் ஆனந்தம் பிரம்மம் தேடும் ஆனந்தம். இதுவே சிருஷ்டியின் தத்துவம், இறைவனின் லீலை.*

*இந்த சரணாகதியின் சிறப்பையும் சமர்ப்பணத்தின் அவசியத்தையும் 270க்கும் மேற்ப்பட்ட கருத்துகளாக தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலில் கூறப்படுகிறது.*

*பாயின்ட் எண் 192 சமர்ப்பணம் வேலைகளைச் சுருக்கும் விரக்தியை விறுவிறுப்பாக்கும்.*

*பாயின்ட் எண் 271 சரணாகதி பலிக்கும் நேரம் இருக்கும் எல்லா பிரச்சனைகளும் உடனே தீரும்.*

*<u>ஸ்வரூபம் சுபாவம்</u>*
*மனிதசுபாவத்தை மாற்ற முடியும், தெய்வீகச் சுபாவமாக மாற்ற வேண்டும் என்பது பூரணயோகம். 'உண்மை', 'விழிப்பு' 'ஏற்புத்திறன்' என்ற கருத்துக்கள் அன்னைக்கு முக்கியமானவை. நாம் யார்? என்ன நினைக்கிறோம்? என்ன பேசுகிறோம்? நினைப்பதைப் பேசுகிறோமா? நல்லதை நினைக்கின்றோமா? எதை நினைக்க வேண்டும் என்ற அறிவு நமக்கு உண்டா? இந்த தெளிவே அன்னை கூறும் உண்மை எனப்படும். போலியின் மீது நம் சுபாவத்திற்கு இருக்கும் பிடிப்பையும் அதிலிருந்து வெளி வருவதற்கு நாம் படும் சிரமங்களையும் நூல் விவரிக்கிறது. இன்று நாம் செய்த தவற்றை கண்டுபிடித்து விட்டார்கள் என்பதால் சாதுர்யமாக பேச்சை மாற்றிப் பேசினால் வந்த வாய்ப்பு மாறும். பேச்சை மாற்றி பேசும் பழக்கம் பொய். தரித்திரத்தை பரம்பரைக்கும் அளிக்கும் திறமையுள்ளது.*

*நம் நினைப்பு எப்படி உள்ளது? அது எப்படி மாற வேண்டும் என்று நூல் சொல்லித்தருகிறது.*

*<u>கணவன் மனைவி</u>*

*கணவன் மனைவியிடையே உள்ள உறவு என்பது புத்திர சந்தானம் என்ற முதல் நிலை ஐக்கியத்திலிருந்து ஆரம்பித்து அடுத்த அடுத்த கட்டமான உயிர், மனம், ஆன்மாவின் ஐக்கியம் என்ற நிலை வரை செல்லலாம் என நூல் கூறுகிறது. முக்கியமாக (1) ஒற்றுமையற்ற தம்பதியர் அன்னை மூலம் எப்படி ஒற்றுமை ஆகலாம் (2) சுமூகமான தம்பதிகள் வாழ்வில் மனவளத்தை உயர்த்தும் வழியுண்டா? (3) சுமூகத்திற்கும் செல்வத்திற்கும் என்ன தொடர்பு (4) அன்னையை அடைய தம்பதிகள் வாழ்வு பயன் படுமா? போன்ற கருத்துகள் நூலில் விளக்கப்படுகிறது. மேலும் திருமணம் பற்றிய பொதுவான கருத்துகள் 100க்கு மேல் சொல்லப்பட்டுள்ளது.*

*ஆதரவற்றவரை அநியாயமாக நடத்துவது என்பது திருமணப் பிரச்சனையில் அடிப்படை காரணம். அதை மாற்றும் வழிகள் கூறப்பட்டுள்ளது.*

*மேலும் 'திருமண வாழ்வில் திருப்தி', என்ற கட்டுரையும் லைப்ஃ டிவையின் தத்துவத்தை இணைத்து 'திருமண வாழ்வில் திருப்தி பெற உதவும் பரிபூரண ஞானம்' என்ற கட்டுரையும் நூலில் இடம் பெற்றுள்ளது.*

*பரமனை நாடும் ஜீவாத்மா*

*மனிதனுக்குப் புனர் ஜென்மம் உண்டு பிறப்பும் இறப்பும் இல்லாத ஜீவாத்மாவிற்கு பகவான் ஸ்ரீ அரவிந்தர் புனர் ஜென்மம் அளிக்கும் யோகம் பூரணயோகம்.*

*ஜீவாத்மாவிலிருந்து சத்திய ஜீவன் பிறப்பது வரை உள்ள 3 நிலைகளை நூல் விளக்குகிறது. அதாவது இறைவன் சிருஷ்டிக்காத ஒன்றை (சத்திய ஜீவனை) மனிதன் இறைவனாகி இனி சிருஷ்டிக்க வேண்டும் என்று கூறுகிறது.*

*மரபு வழியில் வந்த யோகங்களில் கூறப்படும் மோட்சத்தை பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஜீவாத்மாவின் சுயநலமான செயலின் கடைசிக் கட்டம் என விமர்ச்சிக்கிறார். பகவானின் பூரணயோகத்தில் ஜீவாத்மா தன்னையுணர்ந்து புலன்களை விலக்காமல் அவற்றைத் திருவுறுமாற்றத்தால் தூய்மைப் படுத்தி இறைவனாகும் பாதையை நாடுகிறது.*

*இதற்கு ஓர் உதாரணமாக சிறையில் உள்ள கைதிக்கு தப்பிக்க வேண்டுமெனில் எந்தக் கதவு வழியாக விடுதலை கிடைத்தாலும் மகிழ்வான். மோட்சப்பாதையிலும் அது போல ஏதோ ஒரு கரணத்தின் உதவியுடன் உலக வாழ்விலிருந்து தப்பித்து செல்கின்றனர். ஆனால் சிறையையே உலகமாக அறிந்து சிறப்புக்குரிய இடம் சிறை எனக் கணித்து தப்பித்துப் போக விழையாமல், கைதிகளையும் திருவுறுமாற்றி சிறப்பான இடமாக சிறையை மாற்றுவது போன்றது பூரணயோகம்.*

*ஸ்ரீ கர்மயோகி அவர்கள் லைஃப் டிவைன் நூலைப் பற்றி கூறுகையில் 'சொல் நயம் செப்பலோசையாக' இருக்கிறது' என்பார். லைஃப் டிவைன் தத்துவத்தைக் கூறும் இந்நூலோ ஒரு இனிய கவிதையைப் படிக்கும் உணர்வை ஏற்படுத்துகிறது.*

*சிறியதும் பெரியதும்*
*சிருஷ்டிக்கு முன்பு சிறியதில்லை பெரியதுமில்லை. இவை இரண்டும் சிருஷ்டிக்குரியவை. சிருஷ்டி உருவம் என்ற நிலையை அடைந்தவுடன் பெரியது சிறியது என்ற வேறுப்பாடு எழுகிறது.*

*பிரம்மம் சக்தியாகி உருவம் பெறுகிறது. சக்தியை பிரம்மம் சிறிய உருவமாகவோ பெரிய உருவமாகவோ மாறுகிறது. ஒரே சக்தியை பிரம்மம் இரு வேறு உருவங்களாக மாற்றுவதால் சிறியதிலுள்ள சக்தியும் பெரியதில் உள்ள சக்தியும் சமம். சக்தி ஒன்றே உருவம் வேறு. அதனால் சிறியது பெரியதாகலாம். பெரியது சிறியதாகலாம். அந்த திறன் அவ்வுருவத்தை தந்த சக்திக்கு உண்டு. உருவத்தை மறந்து சக்தியை உணர்ந்தால் சிறியது பெரியதாகலாம். சக்தியையும் மறந்து பிரம்மானால் ஒன்று மற்றதாக மாற முடியும். டெக்னாலஜியை ஏற்றுக் கொண்ட மனிதன் குரல் அமெரிக்கா வரை கேட்கும். அன்னையை ஏற்றுக் கொண்ட பக்தனை அவனால் முடியாததை முடியுமாறு செய்வது அன்னை.*

*எந்த நிலையில் டெக்னாலஜி ஏற்றாலும் அந்த நிலையில் அது பயன் தருவது போல் அன்னையிடமிருந்து பெற அந்நிலையில் அவரை ஏற்க வேண்டும் என்கிறது நூல்.*